# <u>கீழக்கரை நகராட்சி</u>

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 ஆகஸ்ட் மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 29.08.2018–ந் தேதி மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**<u>பொருள் : 1</u>**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் விதி 110–ன் கீழ் 2016–17 ம் ஆண்டு சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தகவல், கல்வி, தொடர்பு நடவடிக்கைகள் தொடர்பாக 2846 பரப்புரையாளர்கள், 230 மேற்பார்வையாளர்கள் மற்றும் 11 ஒருங்கிணைப்பாளர்கள் திறந்த வெளியில் மலம் சிறு நீர் கழித்தலால் ஏற்படும் சுகாதார சீர்கேடு, திடக்கழிவுகளை குறைத்திடும் வழிமுறைகள், திடக்கழிவுகளை மறு சுழற்சி செய்தல் மற்றறும் மீண்டும் பயன்படுத்துதல் போன்ற விழிப்புணர்வு பணிகளுக்காக மாநிலம் முழுவதும் மூன்று வருடத்திற்கு பணியாற்ற ரூ.153.71 கோடி மதிப்பீட்டிற்கு தூய்மை இந்தியா திட்டத்திற்கான மாநில அளவிலான திட்ட குழுவின் 4–வது கூட்டத்தின் 12.07.2016–ந் தேதிய தீர்மானத்தின்படி அரசாணை எண்.37 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுஙகல் துறை நாள்.13.04.2017 மற்றும் அரசாணை எண்.191 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுஙகல் துறை நாள். 03.05.2017–ன்படி ஒராண்டு காலத்திற்கு பரப்புரையாளர்களை நியமித்திட வேண்டி ஒப்பந்த புள்ளி கோரி ஆள் வெளி கொணர்வு முகமை மூலம் பரப்புரையாளர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர், திறந்த வெளியில் மலம் சிறுநீர் கழித்தலை அறவே நீக்கும் விழிப்புணர்வு பணிகள் செவ்வனே நடைபெற்று வருவதாகவும் இந்நிலையில் சென்னை மாநகராட்சி, இதரமாநகராட்சிகள், அனைத்து மண்டலத்திற்குட்பட்ட நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அட்டவணையில் குறிப்பிட்டவாறு ஒப்பந்தப்புள்ளி விதிப்படி மேலும் மூன்று மாதஙகளுக்கு கால நீட்டிப்பு அளித்து ஆணையிடப்படுகிறது. இதற்கான ஊதிய தொகையை தஙகளது பொது நிதியிலிருந்து வழஙகிடவும், அரசிடமிருந்து நிதி பெறப்பட்டப்பின்பு ஈடு செய்து கொள்ளவும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளபடி, எதிர்வரும் 2018–19 மற்றும் 2019–20 ஆம் வருட காலத்திற்கும் மேற்படி, பரப்புரையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களைக் கொண்டே தகவல்,கல்வி,தொடர்பு பணியினை மேற்கொள்ள உரிய அரசாணை பெற்றிடவும், இது குறித்து மாநில உயர்மட்ட குழுவின் 7–வது கூட்டத்தின் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26458–1/2016/தி1 நாள்.31.07.2018 –ன் படி தெவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பணிபுரியும் மேற்பார்வையாளர் 1 நபர் மற்றும் பரப்புரையாளர் 6 நபர்கள் ஆக மொத்தம் 7 நபர்கள் AMK-MAN Power Service மூலம் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறது. இவர்களின் ஒப்பந்தகாலம் 30.09.2018–ந் தேதி முடிவடைவதால் 30.12.2018 வரை கால நீட்டிப்பு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 31.07.2018–ந் தேதிய உத்திரவிடப்படி இவர்களுக்கான ஊதிய தொகையை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகிடவும், அரசிடமிருந்து நிதி பெறப்பட்டவிடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.1416/2016/எச்1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.419</u>** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

கீழக்கரை நகராட்சி **TN65 S4101** ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்தற்கு வீல் பேரிங, கிரீஸ், ஆயில் சீல், பிரேக் லைனிங, வீல் சிலிண்டர் அசெம்ப்ளி, பிரேக் ஆயில் 500 ML, ஸ்பிரிங கட் அன்ட் ரிமூவ் ரெக்கமெரிங ரிபிட்டிங, டிரம் பேசிங அன்ட் லேத் ஒர்க், 4 வீல் கிரீஸ் பேக்கப், 4 வீல் பிரேக் செக்கப் போன்ற பணிகளை செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.35,000/–க்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.397, நாள்.26.06.2018ன்படி அனுமதி பெற்று, அதனடிப்படையில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் 10.08.2018–ந் தேதி வரப்பெற்ற கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் / நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1) | என்.எஸ். ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்,<br>202/3A பேராவூர் போஸ்ட்<br>தேவிப்பட்டினம் ரோடு<br>இராமநாதபுரம். | ரூ.30,060/–<br>(CGST & SGST உட்பட) |
| 2) | ஸ்ரீ விக்னேஷ் என்ஜினியரிங ஒர்க்ஸ்<br>மஹர் நோன்பு திடல் அருகில்<br>கேணிக்கரை, தேவிப்பட்டினம் ரோடு<br>இராமநாதபுரம். | ரூ.33,222/–<br>(CGST & SGST உட்பட) |
| 3) | ஏ.ஆர். என்ஜினியரிங ஒர்க்ஸ்,<br>16/7C ஏ.கே.எஸ். காம்ப்ளக்ஸ்,<br>பி.1 போலிஸ் ஸ்டேசன் அருகில்,<br>ஜி.ஹெச். ரோடு, இராமநாதபுரம். | ரூ.34,343/–<br>(CGST & SGST உட்பட) |

**(கோப்பு எண். 700/2018/இ1)**

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் என்.எஸ்.ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், இராமநாதபுரம் ரூ.30,060/–க்கு கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.420** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 3**

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகராட்சியில் 2002 ஆம் வருடத்தில் (Bio-Diversity Management Committee (BMC)) பல்லுயிர் பன்மியச் சட்டம் (மத்தியசட்டம்), 2004 ஆம்வருடத்திய பல்லுயிர் பன்மிய விதிகள் மற்றும் 2017ம் வருடத்திய தமிழ்நாடு பல்லுயிர் பன்மிய விதிகள் ஆகியவற்றில் தொகுத்தளிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இணஙக, இந்நகராட்சியில் தனித்துவமிக்க தாவரஙகள் மற்றும் பல்லுயிர்கள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக பின்வரும் உறுப்பினர்களை கொண்ட பல்லுயிர் பன்மிய மேலாண்மைக் குழு தோற்றுவிக்கப்பட்டமைக்கு தனி அலுவலரின் அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

1) திரு. த.நாராயணன் பி.எஸ்சி.,
ஆணையாளர், – குழுத்தலைவர்
கீழக்கரை நகராட்சி ,
கீழக்கரை.

2) திரு. எஸ். சிக்கந்தர் பாட்ஷா
வன அலுவலர் அவர்கள் – செயலாளர்
வனச்சரக அலுவலகம்,
கீழக்கரை.

3) திரு. எஸ். சுந்தரம்,
த/பெ. ஆர். சேதுராமன், – உறுப்பினர்
2/86–டி, அன்பு நகர்,
கீழக்கரை.

4) திருமதி.கே. அருள்ஜோதி
க/பெ. கந்தகிருஷ்ணன், – உறுப்பினர்
1/32, கிருஷ்ணாபுரம்,
கீழக்கரை.

5) திரு. எம்.நாகராஜ்
த/பெ. முத்து
மீனவர் குப்பம் தலைவர், – உறுப்பினர்
3/37, மீனவர் குப்பம்,
கீழக்கரை.
வாக்காளர் அடையாள அட்டை எண்.WRM08857595

6) திருமதி. வனிதா
க/பெ. ரமேஷ் – உறுப்பினர்
3/75, பெத்திரி தெரு,
கீழக்கரை.

7) திருமதி. ரூபி
க/பெ. கனகராஜ் – உறுப்பினர்
2/65, அன்புநகர்,
கீழக்கரை.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.421** அங்கீகரிக்கப்பட்டது.

**தனி அலுவலர் மற்றும்**
**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி**